# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

## முன்னிலை

## திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி., மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண்.SA.1840/C/2024

திரு N. நடராஜன் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட வன அலுவலகம், வேலூர் வனக்கோட்டம்,
ரங்காபுரம் சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம் - 9. -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 11.10.2023 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 09.11.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 06.12.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 13.02.2024 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு N. நடராஜன் என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி கோ. விஜி, கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலகம், வேலூர் வனக்கோட்டம், ரங்காபுரம் சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம் என்பவருக்கு பதிலாக திரு பெ. திருப்பதி, உதவியாளர், மாவட்ட வன அலுவலகம், வேலூர் மாவட்டம் என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், வேலூர் மாவட்ட வனக்கோட்ட அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், திருப்பத்தூர் சமூக காடுகள் வனச்சர அலுவலராக பணிபுரிந்தபோது, கடந்த மார்ச்

2014 முதல் ஜீலை 2014 வரையிலான காலத்தில் சம்பளத்தில் வருமானவரி தொகை ரூ.20,600/- பிடித்தம் செய்ததற்கான Form-16 மற்றும் TDS File செய்த விவரம் ஆகியவற்றை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரியுள்ள மார்ச் 2014 முதல் ஜீலை 2014 வரையிலான காலத்தில் சம்பளத்தில் வருமானவரி தொகை ரூ.20,600/- பிடித்தம் செய்ததற்கான Form-16 மற்றும் TDS File செய்த விவரம் ஆகியவற்றை மனுதாரருக்கு ந.க.எண்.9911/2023/க2 நாள் 04.03.2025 தேதியிட்டு ஏற்கெனவே தகவல்களாக வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர், இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகி அவரது கருத்தினை எடுத்துரைக்கத் தவறியுள்ளார். எனவே, பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக ஏற்கெனவே மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.1840/C/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட வன அலுவலகம், வேலூர் வனக்கோட்டம்,
ரங்காபுரம் சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம் - 9.

**<u>வழக்கு எண்.SA.1840/C/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு N. நடராஜன்,
எண்.115, சாமநகர், YMCA ரோடு,
திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம் - 635 601.

Copy to: File
SNPS / 09.04.2026